**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 95/2023** **Date:26.11.2025**

**(PW1)- டென்னிஸ்**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பக்கம் 3 ல் வழக்கு A, B பட்டிகை சொத்துகளும் ஒரே முன்னோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டுள்ளதை நிரூபிப்பற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. A, B பட்டிகை சொத்துகள் ஒரே முன்னோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தனதுஅறிக்கையில் கான்கீரிட் சாலை 3 அடி அகலத்தில் அமைந்துள்ளதாக குறிப்பிட்டள்ளார் என்றால் சரியல்ல, 5 அடி அகலத்தில் உள்ளது. மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு நான் ஆட்சேபணை ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

2. நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் பச்சை நிறத்தில் குறிப்பிட்டுள்ள கான்கிரீட்சாலை வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு அலத்தில் உள்ளதாக புலப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி கான்கிரீட்சாலையின் இருபுறமும் உள்ள இடங்களை கடந்த இரண்டு வருடங்களுக்குள் தான் அகலப்படுத்தியிருப்பார்கள் என்றால் சரியல்ல, அதற்கு முன்பே அகலப்படுத்தி விட்டார்கள். மேற்படி கான்கிரீட்சாலை எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது என்றால் சுமார் 4 முதல் 5 வருடங்களுக்கு முன்பு அமைத்திருப்பார்கள்.

3. எனவே 4 முதல் 5 வருடங்களுக்கு பின்பு தனா் மேற்படி கான்கிரீட்சாலை யின் இருபுறமும் உள்ள உரிமையாளர்கள் பாதையை அகலப்படுத்த இடம் விட்டு கொடுத்திருப்பார்கள் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிடும் போது நான் குறிப்பிடும் தடுப்பு சுவர் என்பது அங்கில்லையென்றால் சரியல்ல. மேற்படி கான்கிரீட்சாலை வழியாக ஒரு ஆட்டோ செல்லக்கூடிய அளவில் தான் அகலம் உள்ளது என்றால் சரியல்ல, குட்டியானை வண்டி செல்லக்கூடிய அகலத்தில் உள்ளது .

4. என்னுடைய வீடு கட்டுவதற்கு தேவையான பொருட்களை லாரி முதலிய கனரக வாகனங்களின் மூலம் மேற்படி கான்கிரீட் பாதை வழியாக கொண்டு சென்றேன்

என்றால் சரிதான். நான் சொல்வது போல் கனரக வாகனங்கள் மூலம் பொருட்களை கொண்டு செல்ல முடியாது என்றாலும் எனது வீட்டிற்கு தேவையான கட்டுமான பொருட்களை ரயில்வே பாதை வழியாக கொண்டு வந்தேன் என்றால் சரியல்ல, சி எஸ் ஐ சர்ச் அருகில் கன ரக வாகனத்தை நிறுத்தி விட்டு அங்கிருந்து குட்டியானை வண்டி வழியாக பொருட்களை கொண்டு சென்றேன். நான் குறிப்பிடும் B பட்டிகை சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் இல்லை என்றாலும் அது வேறு ஒரு நபரின்அனுபவத்தில் உள்ளது என்றாலும் சரிதான், அவரது அப்பாவின் பெயரில் உள்ளது. வாதியின் அப்பாவின் பெயரில் மேற்படி சொத்து இல்லையென்றாலும் அது மூன்றாவது நபரின் பெயரில் உள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

5. B பட்டிகை சொத்து யாருடைய பெயரில் உள்ளது என்றால் வாதியின் அப்பாவான தவமணியின் பெயரில் உள்ளது. எதனடிப்படையில் வாதியின் அப்பாவின் பெயரில் உள்ளது என்று கூறுகிறேன் என்றால் அவர்கள் சொத்திற்கான தீர்வை ரசீது மூலம் கூறுகிறேன். எந்த வருடத்திற்கான தீர்வை ரசீதை நான் பார்வையிட்டேன் என்றால் 2019 ம் வருடம் பார்த்தேன். எவ்வாறு மேற்படி ஆவணத்தை பார்த்தேன் என்றால் பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து வசூல் செய்பவரிடம் இருந்த தீர்வை செலுத்தும் பதிவேட்டில் பார்த்தேன்.

6. பஞ்சாயத்து அலுவலகத்தில் வரி ரசீது இருக்காது என்றாலும் அது கிராம நிர்வாக அலுவலகத்தில் தான் இருக்கும் என்றாலும் சரியல்ல. B பட்டிகை சொத்தில் எந்த வித கட்டுமானமுமில்லையென்றால் சரியல்ல, ஒரு வீடு உள்ளது. அந்த வீடு தற்போது இடிந்த நிலையிலும் அதற்கு தனியாக மின் இணைப்பு மட்டும் உள்ளது என்றால் சரியல்ல, இடிந்த நிலையில் இல்லை, நல்ல நிலையில் உள்ளது. நான் குறிப்பிடும் நல்ல நிலையில் உள்ள வீடு, இடிந்த நிலையில் உள்ள வீட்டிற்கு வடக்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரியல்ல.

7. என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்த கடைசி புகைப்படத்தில் ஒரு இடிந்த நிலையில் காணப்படும் கட்டிடத்தின் கிழக்கு பக்கத்தில் இடிந்த நிலையில் ஒரு கட்டுமானம் உள்ளது என்றால் சரிதான், அது காம்பவுண்ட்சுவர் ஆகும். மேற்படி காம்பவுண்ட்சுவர் பிரதிவாதியின் சொத்தின் வீட்டின் கிழக்கு எல்லையில் மேற்படி காம்பவுண்ட்சுவர் சென்றடைகிறது என்றால் சரிதான். அதே போல் பிரதிவாதியின் சொத்திற்கு வடக்கு பக்கம் காம்பவுண்ட்சுவர் உள்ளது என்றால் சரிதான்.

8. அதே போல் பிரதிவாதியின் சொத்திற்கு மேற்கு பக்கம் காம்பவுண்ட்சுவர் உள்ளது என்றால் சரிதான். நானும் என்னுடைய அடியாட்களும் சேர்ந்து பிரதிவாதி தனது சொத்தற்கு நான்கு பக்கமும் கட்டியிருந்த காம்பவுண்ட் சுவரின் தெற்கு பக்கத்தை இடித்து விட்டோம் என்றால் சரியல்ல, பிரதிவாதி தான் இடித்து அப்புறப்படுத்தி கட்டினார். அவ்வாறு இடித்து அப்புறப்படுத்தி கட்டியது தொடர்பாக நான் காவல்நிலையத்தில் ஏதாவது புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. பிரதிவாதியின் தெற்கு பக்கம் காம்பவுண்ட் சுவரை நானும் எனது ஆட்களும் இடித்தது சம்பந்தமாக பிரதிவாதியும் அவரது மனைவியும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், அது பொய் புகார் ஆகும்.

9. நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்டு வழக்கு B பட்டிகை சொத்து பாதையோடு தொடர்பில்லாமல் இருக்கிறது என்று குறிப்பிட்ட காரணத்தினால் மேற்படி B பட்டிகை சொத்தை பாதையென்று நான் கோர உரிமையில்லையென்றால் சரியல்ல. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் கான்கிரீட் பாதையின் இருபுறத்திலுள்ள உரிமையாளர்கள் இடத்தை கொடுத்தார்கள் என்பது போல் பிரதிவாதியின் இடத்தையும் இடித்து அப்புறப்படுத்தி பிரதிவாதியின் சொத்தில் பாதை உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. நான் குறிப்பிடும் வழக்கு B பட்டிகை சொத்து ஸ்தலத்தில் இல்லையென்றாலும் யூகத்தின் அடிப்படையில் வழக்கு B பட்டிகை சொத்து இருப்பது போல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. யூகத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்து வழக்காட யாருக்கும் உரிமை கிடையாது என்றாலும் யூகத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யபட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

10. என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடத்தில் மஞ்சள், பச்சை நிறங்களாக வெவ்வேறு நிறத்தில் குறிப்பிட்டிருப்பதற்கு காரணம் இரண்டு நிறங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகளும் வெவ்வேறு சொத்துகள் என்று காட்டுவதற்காக என்றால் சரியல்ல, இரண்டு சொத்துகளும் சேர்த்து 10 அடி பாதையாகும். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் மஞ்சள் நிறத்தில் குறிப்பிட்டுள்ள இடமானது பாதையில்லையென்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் B பட்டிகை சொத்து பாதையில்லையென்று அறிக்கையை தாக்கல் செய்த பின்னரும் மேற்படி சொத்தை பாதையென்று வழக்காடுவதில் எனக்கு

எந்த உரிமையுமில்லையென்றால் சரியல்ல. B பட்டிகை சொத்து பாதை என்பதற்கு ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான்.

11. எனவே நான் எனக்காகவும் , ஆத்திவிளை ஊர் மக்களுக்காகவும் இந்த வழக்கை நடத்த உரிமையற்றவர் என்றால் சரியல்ல. B பட்டிகை சொத்து எந்த காலத்திலும் பாதையாக பயன்படுத்தாத காரணத்தினாலும் மேற்படி சொத்து பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்